ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

# சாதுர்மாஸ்ய புண்ய கால பூஜைகள்

## 13-07-2022 முதல் 10-09-2022 வரை



ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தியின் பேரருளாலும் பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் ஆசியினாலும் இந்த ஆண்டு சாதுர்மாஸ்ய புண்யகால தினசரி நிகழ்வுகள் வருகிற ஜூலை மாதம் 13 ஆம் தேதி ஸ்ரீகுருபூர்ணிமா தினம் துவங்கி சிறப்பாக நடைபெற உள்ளது.

இந்த பூஜைகள் வரும் செப்டம்பர் மாதம் 10 ஆம் தேதி வரை தினசரி நண்பகல் 12.00 மணி முதல் கீழ்க்கண்ட நிகழ்வுமுறையின்படி தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

•ஸ்ரீதத்த பாதுகா பூஜை மற்றும் ஸ்ரீகுருபாதுகா பூஜை
•ஸ்ரீகுருகாணிக்கை ஸமர்ப்பணம் •அதிஷ்டான பூஜா ஸமர்ப்பணம் •ஸாதுக்கள் பிக்ஷா

மேற்கண்ட ஸேவைகளில் இதுவரை பக்தர்கள் கலந்துகொண்டு சிறப்பித்து வந்துள்ளனர். செப்டம்பர் 10 ஆம் தேதிவரை தொடர்ந்து நடக்க உள்ள இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளப் பேரன்புடன் வேண்டுகிறோம்.

---

ஸ்ரீகுருபூர்ணிமா, சாதுர்மாஸ்யத்தின் சிறப்பினைப் பற்றிய புத்தகத்தினை பதிவிறக்கம் செய்ய கீழ்க்கண்ட லிங்கை உபயோகிக்கவும்:

https://eu-central-1.linodeobjects.com/atmavidya/pdf/06_vedaneri/20210724_GP_VV.pdf

## சாதுர்மாஸ்ய வ்ரதம்

குரு பூர்ணிமா நாளானது, துறவிகளுக்கும் அவர்களுடைய சீடர்களுக்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். இது, வ்யாஸ பூர்ணிமா என்றும் அழைக்கப்படும்.

வ்யாஸ பூர்ணிமா தினத்தன்று, ஸநாதந தர்மத்தைக் கடைப்பிடிக்கின்ற அனைவராலும் வழிபடப்படுகின்ற பகவான் ஸ்ரீவேதவ்யாஸருக்கு பூஜை செய்யப்படுகிறது. பகவான் ஸ்ரீவேத வ்யாஸர் நமக்கு அரிய ஞானச் செல்வங்களை அருளியுள்ளார், வேதங்களை நான்காக வகுத்துள்ளார், ப்ரஹ்ம ஸூத்ரங்களை அருளியுள்ளார், மஹாபாரதத்தையும், பதினெட்டு புராணங்களையும் இயற்றியருளியுள்ளார். வேதாந்த சாஸ்த்ரத்தைக் கற்றுப் பயன்பெறுகின்ற குருமார்களும் சீடர்களும், பகவான் ஸ்ரீவேத வ்யாஸருக்கு மிகுந்த நன்றிக்கடன்பட்டிருக்கிறார்கள்.

குரு பூர்ணிமா அன்று, பகவான் ஸ்ரீவேத வ்யாஸர், ஸ்ரீஆதிசங்கரர், குரு பரம்பரையில் உள்ள அனைத்து ஆசார்யர்கள், நம் ஆசார்யர் ஆகிய அனைவரையும் வழிபடுகிறோம். இந்நாளில் அனைத்து அறிவுக்கும் ஆதாரமாக விளங்குகின்ற ஆதிகுரு ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியை, அவரது அருளை வேண்டி வழிபடுகிறோம்.

நாம் செய்யும் பல பூஜைகளுள் ஸ்ரீவேதவ்யாஸ பூஜை முக்கியமானதொன்றாகும். முற்காலத்தில் பொதுவாக, துறவிகள் ஓர் இரவிற்குமேல் ஓர் ஊரில் தங்கமாட்டார்கள். ஆனால் மழைக்காலத்தின்போது, சேறும் சகதியுமாக இருப்பதால், பயணம் செய்வது கடினமாக இருக்கும். ஈரமான நிலத்தில் புழு பூச்சிகள் அதிகம் காணப்படும். அஹிம்ஸையையே முக்ய வ்ரதமாகக்கொண்ட ஸந்யாஸிகள் நிலத்தில் நடக்க அஞ்சுவர்.

ஆகையால் மழைக்காலம் ஆரம்பமானவுடன் ஓரிடத்திலேயே நான்கு மாதங்கள் தங்குவர். அப்படிப்பட்ட அபயப்ரதானமளிக்கின்ற மஹாத்மாக்களாகிய அத்துறவிகள் எப்பொழுது நம் ஊருக்கு வருவார்கள் என்று மக்கள் ஆவலோடு காத்திருப்பார்கள். துறவியானவர், தங்களுடைய ஊருக்கு வந்தவுடன், அவரை வரவேற்று, வணங்கி, உபசரித்து, தாங்கள் இங்கேயே தங்கியிருக்க வேண்டும்; வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து தருகிறோம் என்று ப்ரார்த்திப்பார்கள்.

துறவி, ஸ்ரீவேதவ்யாஸ பூஜை செய்து, நான்கு மாதங்கள் இங்கு தங்கியிருக்கப் போகிறேன் என்று ஸங்கல்பம் செய்து, சாதுர்மாஸ்ய வ்ரதத்தை அநுஷ்டிப்பார்.

பக்ஷா வை மாஸா:। என்று வேதம் சொல்லியிருப்பதை அநுசரித்து ஸாதுக்கள் நான்கு மாதங்களுக்குப் பதில், நான்கு பக்ஷங்கள் வ்ரதத்தை அநுஷ்டிக்கிறார்கள். சாஸ்த்ர மரபுப்படி சாதுர்மாஸ்ய வ்ரதத்தை அநுஷ்டிக்கின்ற துறவிகளுக்கு ஸேவை செய்வது நமக்கு கிடைத்தற்கரிய வாய்ப்பாகும். துறவிகளுக்கு பிக்ஷா வந்தநம் அளித்து, இயன்ற வரை ஸேவை செய்து, புண்ணியம் பெறுவோமாக!



ஸ்ரீதத்த பாதுகா பூஜை





ஸ்ரீகுரு பாதுகா பூஜை



ஸ்ரீகுரு காணிக்கை ஸமர்ப்பணம்



ஸாதுக்கள் பிக்ஷா

மேற்படி நிகழ்வுகள் தினசரி நமது “Vedapuri Events” YouTube சானல் வாயிலாக ஒளிபரப்பு செய்யப்படும்.

## சேவை விவரங்கள்



ஸ்ரீதத்த & ஸ்ரீகுருபாதுகா பூஜை - ரூ. 2000

ஸாதுக்கள் பிக்ஷா &
ஸ்ரீகுருஸேவகர்கள் அந்நதாநம் - ரூ. 9000

அதிஷ்டாந பூஜை ஸமர்ப்பணம் - ரூ. 500

ஸ்ரீகுருகாணிக்கை - தங்கள் விருப்பம்போல்

## காணிக்கை செலுத்தும் வழிமுறை

Details of the bank accounts, for online transfer:

**For Sri Dattatreya & Sri Guru Paduka Puja**

Sri Dakshinamurti Seva Samiti: SB A/C Number: 017401000014752
Indian Overseas Bank, Theni. IFSC: IOBA0000174

**Sadhus Bhiksha & Sri Guru Sevaks Annadanam, Adhistanam offering, & Sri Guru Kanikkai**

Vedanta Sasthra Prachara Trust: SB A/C Number: 017401000010179
Indian Overseas Bank, Theni. IFSC: IOBA0000174

**மெய்யன்பர்களே!**

பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகள் வழிவகுத்துக்கொடுத்தபடி நடைபெறுகின்ற பூஜைகள் மற்றும் ஸேவைகளில் கலந்துகொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

தங்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் இதனைத் தெரிவித்து பங்குகொள்ளச்செய்து ஸ்ரீதத்தாத்ரேயர் மற்றும் பூஜ்யஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பேரருளைப் பெற்றுய்யப் பேரன்புடன் வேண்டுகிறோம்.

- ஸங்கல்பம் செய்ய தங்களின் குடும்ப நபர்களின் பெயர், நக்ஷத்ரம், ராசி விவரங்களை கீழ்க்காணும் லிங்கினை உபயோகித்து பதிவு செய்யவும்.
  https://forms.gle/wmpmUMBnpfvnFKi49
- மேற்படி வங்கிக் கணக்கில் பணம் செலுத்திய விவரத்தை swamiomkarananda@vedaneri.org மின் அஞ்சலுக்குத் தகவல் தெரிவிக்கவும்.
- தங்களின் இந்திய முகவரிக்கு ரசீதும் திருவருட்ப்ரஸாதங்களும் கூரியரில் முறையாக அனுப்பி வைக்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு: www.vedaneri.org +91 97517 51910 / +91 96004 49031